வாக்குமூலம்

உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், மாதவரம்.

வழக்கு எண். CC 318/2021

வழக்கு சாட்சி LW1 / PW1

| | | | |
|---|---|---|---|
| பெயர் | இளங்கோ, சிறை அலுவலர், புழல் மத்திய சிறை I | ஜாதி | |
| கணவர்/தந்தை | கதிரேசன் | தொழில் | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுக்கா | | வயது | 61 |

தேதி 11.12.2024

எதிரி ஆஜர்.

சாட்சி சத்தியபிரமாணம் செய்யப்பட்டார்.

**முதல் விசாரணை**

நான் புழல் மத்திய சிறைச்சாலை 1 ல் சிறை அலுவலராக 24.12.2020 முதல் பணியில் இருந்துவந்தேன். காவல் துறை இயக்குனர் மற்றும் சீர்திருத்த பணிகள் தலைவர் அவர்களின் ஆணைப்படி நிலுவை வழக்குகளை முடிப்பதற்காக வேலூர் மத்திய சிறையில் இருந்து 29.09.2021ல் மத்திய சிறை புழல் 1ல் அனுமதிக்கப்பட்ட OJCT 1884 ராதா (எ) ராதாகிருஷ்ணன் வயது 37/21 த/பெ. ராமானுஜம் என்பவரை 09.10.2021 காலை 11 மணிக்கு வழக்கறிஞர் நேர்காணல் காண்பதற்காக QRT காவலர் திரு. தினு இரண்டாம் நிலை காவலர் எண். 118 என்பவரால் சிறைவாசி அடைப்பு செய்யப்பட்டிருந்த தனிச்சிறை அறையில் இருந்து அழைத்து வரும்போது வழியில் AMPI திரையரங்கம் அருகில் வேலைசெய்து கொண்டிருந்த ஆயுள் தண்டனை சிறைவாசி 7651 பிரகாஷ் (எ) தவளை பிரகாஷ் இ த/பெ. மகேந்திரன், என்பவர் ராதாகிருஷ்ணனிடம் பேச முயற்சி செய்தார். அப்பொழுது காவலர் தினு என்பவர் ராதாகிருஷ்ணனுக்கு சிறையில் அச்சுறுத்தல் உள்ளதால் பேச அனுமதிக்க முடியாது என கூறியுள்ளார். இதற்கு உடன்படாத மேற்படி இரண்டு சிறைவாசிகளும் காவலர் தினுவை தகா த வார்த்தைகளால் பேசியுள்ளார். உடன் காவலர் தினு, பிரகாஷ் (எ) தவளை பிரகாஷை தனியாக பிரித்து அவரது தொகுதிக்கு அனுப்பி வைத்தார். சிறைவாசி ராதாகிருஷ்ணனை வழக்கறிஞர் நேர்காணலுக்கு அழைத்து வந்துள்ளார். வழக்கறிஞர் நேர்காணலை நடத்தும் அலுவலர் திரு. சரவணகுமார் முதல் நிலை காவலர் என்பவர் முன்னிலையிலும், சிறைவாசி ராதாகிருஷ்ணன் காவலர் தினுவை தகாத வார்த்தைகளால் திட்டியும், ஒருமையில் பேசியும் அரசு ஊழியரை பணி செய்ய விடாமல் தடுத்தும், "சிறைக்கு

வெளியே வா உன்னை பார்த்துக்கொள்கிறேன் " என்று மிரட்டியுள்ளார். இது தொடர்பாக புழல் காவல் ஆய்வாளரிடம் புகார் சிறைவாசி ராதாகிருஷ்ணன் என்பவர் மீது உரிய வழக்கு பதிவு செய்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று புகார் அளித்தேன். தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் நான் அளித்ததுதான். மேற்படி புகாரானது அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

சம்பவம் தேதி என்னவென்றால் 09.10.2021. எத்தனை மணிக்கு சம்பவம் நடந்தது என்றால் காலை 11 மணிக்கு. காலதாமதமாகத்தான் புகார் அளித்தோம் என்றால் உயர் அதிகாரிகளிடம் ஆலோசனை செய்துவிட்டு இரவு அளித்தோம். நான் கூறுவது தவறு என்றாலும் 10.10.2021 அன்றுதான் புகார் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல. சிறைவாசி எதிரி எப்பொழுதும் தனிச்சிறையில்தான் இருப்பார் என்றால் ஆமாம். AMPI திரையரங்கில் யார் வேலை செய்தார்கள் என்றால் பிரகாஷ் (எ) தவக்களை பிரகாஷ். சிறைவாசி தனிச்சிறையில்தான் எப்பொழுதும் இருப்பார் என்றாலும் அவர் தனியாக வரமாட்டார் என்றால் ஆமாம். போலீசார் துணையுடன்தான் வழக்கறிஞர், உறவினர் நேர்காணல், உணவு அருந்த வருவார். வழக்கறிஞர் நேர்காணல் வரும்போது போலீசார், ஜெயிலர் இருப்பார்கள் என்றால் ஆமாம். எதிரி ஆயுள் கைதி என்பதால் அவர் யாரையும் சண்டையிட அவசியம் இல்லை என்றால் சரியல்ல. சம்பவம் ஏதும் நடக்கவில்லை என்றாலும், புள்ளிவிபர கணக்கிற்காகவும், கருணை அடிப்படையில் தண்டனை தளர்வு ஏதும் பெற்றுவிடக்கூடாது என்பதற்காக பொய்யாக புகாரானது அளிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. ஆஜர் எதிரிக்கும் இவ்வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றாலும், பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**